முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், திண்டுக்கல்

| | |
|---|---|
| எஸ்.சி.எண்.192/2023 | அ.த.சா.15 |
| பெயர்: பழனிச்சாமி | வேலை: |
| தகப்பனார் பெயர்: | மதம்: |
| கிராமம்: | வயது: |
| தாலுகா: | நாள்: 09.06.2026 |

1872 ம் ஆண்டின் இந்திய சாட்சியச்சட்டம் பிரிவு 10 ன்படி சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு பிரமாணத்தின் பேரில் சாட்சியின் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

**(எதிரி ஆஜர்)**

முதல் விசாரணை :–

நான் காவல்துறையில் சார்பு ஆய்வாளராக பணி ஓய்வு பெற்றுள்ளேன். கடந்த 27.08.2022 ம் தேதி நான் எரியோடு காவல் நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணியில் இருந்தபோது அசா1 நிலையம் ஆஜராகி கொடுத்த புகாரைப்பெற்று புகாரின் தன்மைக்கு ஏற்ப நிலைய கு.எண்.184/2022 சட்டப்பிரிவு 302 இதச படி வழக்கு பதிவு செய்தேன். அசா1 கொடுத்த புகார் மனு அதசாஆ.11. நான் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கை அதசாஆ.12. அசல் புகாரையும் முதல் தகவல் அறிக்கையையும் வேடசந்தூர் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்திற்கு அனுப்பிவைத்தேன். இதர நகல்களை சம்மந்தப்பட்ட அதிகாரிகளின் பார்வைக்கு வைத்தேன். ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

எதிரி தரப்பு குறுக்கு விசாரணை –

சம்பவம் நடந்து சுமார் 1.1/2 மணி நேரம் கழித்து புகார் கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். புகாரை யார் எங்கு வைத்து எழுதினார்கள் என்று எனக்கு தெரியாது. புகார் பதிவு செய்த அன்று பொது நாட்குறிப்பில் நான்தான் அந்த விவரத்தை பதிவு செய்தேன். முதல் தகவல் அறிக்கையில் பொது நாட்குறிப்பு பதிவு சம்மந்தப்பட்ட விவரங்களை குறிப்பிடவில்லை என்றால் சரிதான். நான்

பதிவு செய்த முதல் தகவல் அறிக்கையில்  என்னுடைய கையெழுத்துக்கு கீழே எத்தனை மணிக்கு பதிவு செய்தேன் என்ற விவரத்தை குறிப்பிடவில்லை என்றால் சரிதான்.  நான் முதல் விசாரணையில் சொன்ன நாளில், நேரத்தில், இடத்தில், விதத்தில் அசா1 புகார் கொடுக்கவில்லை என்றும், அதை பெற்று நான் வழக்கு பதிவு செய்யவில்லை என்றால் சரியல்ல.

மறு விசாரணை –இல்லை

PADMANABAN VENKATASAMY

Digitally signed by PADMANABAN VENKATASAMY
Date: 2026.06.09 16:09:32 +0530

Principal District Judge,
Dindigul.